58) வயதாவதற்கு முன் முகத்தில் சுருக்கம் வருவதற்குக் காரணம் உடலில் அயடீன் சத்துக் குறைவுதான். இதற்கு முட்டை, மீன் உணவு, முட்டைக்கோஸ், கடலை, தக்காளியை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

59) அப்பிள் பழத்தைத் துண்டாக்கித் தேனில் தோய்த்துச் சாப்பிட்டால் கண்களிற்கு அழகையும் சிறந்த தெளிவையும் தரும். இதனால்தான் அப்பிள் அழகிகள் இன்றும் உள்ளனர்.

60) மிருதுவான மாவிலைக்குருத்துக்களை தினமும் சாப்பிட்டு வருபவர்களிற்கு குரல் இனிமையாக இருக்கும்.

61) அத்திக்காயை அடிக்கடி சமையல் செய்து சாப்பிடுங்கள் நரம்புத் தளர்ச்சியை போக்கவல்லது. ஆயுளை அதிகரிக்கும்.

62) நெருப்பினால் ஏற்படும் புண்களிற்கு நன்றாகக் கனிந்த வாழைப்பழங்களை புண்களின் மீது தடவி வெற்றிலையால் மூடித் துணியால் கட்டி வாருங்கள். நெருப்பில் சுட்ட புண்கள் விரைவில் மாறிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63) நெருப்பிற் சுட்ட புண்களுக்கு கைகண்ட மருந்து தேனும் வெள்ளை முட்டைக்கருவும் தான். இவற்றில் தீச்சுட்ட இடத்தில் எதனைப் பூசினாலும் பொக்களங்கள் ஏற்படாமல் சில தினங்களில் நெருப்பில் சுட்ட காயம் மாறும்.

64) வெங்காயத்தை இடித்துச் சாறு எடுங்கள். பல்லில் வலி உள்ளவர்கள் இந்த வெங்காயச் சாற்றைப் பல்லில் தடவி வாருங்கள். சிறிது நேரத்தில் பல்வலி குணமாகிவிடும்.

65) பாலில் குங்குமப் பூ போட்டுச் சாப்பிடுவதால் பால் வெகு சீக்கிரத்தில் சமிபாடாகி இரத்தத்துடன் அதன் சத்துக் கலந்துவிடும்.

66) நகச்சுற்றுக்குக் கொழுந்து வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி நன்றாக அரைத்து நகச்சுற்று உள்ள இடத்தில் கட்டி விடுங்கள். நகச்சுற்றுக் குணமாகிவிடும்.

67) மாங்காய் ஊறுகாய், எலுமிச்சை ஊறுகாயை இரவில் சாப்பிடக்கூடாது. புளிப்புச் சத்துக்கள் இரவில் தளர்ச்சியை உண்டு பண்ணவல்லன.

68) பெண்கள் அடிக்கடி தலைவலி மாத்திரைகள் சாப்பிடக் கூடாது. தலைவலி மாத்திரைகளை அடிக்கடி உட்கொள்ளும் பெண்களுக்கு குழந்தைகள் பிறப்பதில்லை.

69) தாய்ப்பால் அதிகமாகச் சுரக்கப் பாலூட்டும் தாய்மார்கள் அதிக எள்ளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

70) கண் இரத்தம்போல் சிவந்து வலி ஏற்பட்டால் கற்றாளையைச் சுட்டு ஒரு சுத்தமான துணியில் வைத்துக் கொண்டு கண்ணுக்கு ஒத்தடம் கொடுத்தால் கண் வலி போய் சிவப்பும் மாறிவிடும்.

71) காதுக்குள் எறும்பு புகுந்து விட்டால் தண்ணீரில் உப்பைக் கரைத்து வடிகட்டி காதில் விட்டால் எறும்பு வெளியே வந்துவிடும்.

72) நமது உடம்பில் 4448 வியாதிகள் வருகின்றன. இந்த நோய்கள் வருவதற்கான காரணம் உணவு முறைகளில் ஏற்படும் கோளாறுகள்தான். கத்தரிக்காய் விதைகளுக்கு அம்மை நோயை மற்றவர்களுக்குத் தொற்றாமல் இருக்கும் சக்தி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73) சலம் போவதற்குச் சிரமமாக இருந்தால் எலுமிச்சம்பழச் சாற்றையும் நல்லெண்ணெயையும் சமவளவு கலந்து சாப்பிட்டால் சலக்கடுப்பு நீங்கிச் சலம் சுலபமாக வெளியேறும்.

74) எலுமிச்சம் பழத்தைத் துணியில் சுற்றி, களிமண்ணைப் பூசி, தணலில் வாட்டியபின் அதன் சாறைக் குடித்தால் தும்மல், தலைவலி, சளித்தொல்லை நீங்கும்.

75) அடிபட்ட காயத்தில் இரத்தம் நிற்காமல் ஓடுமானால் மூங்கிலை எரித்து சாம்பல் தூளைக் காயத்தின் மேல் தூவினால் இரத்தம் வருவது உடனடியாக நிற்கும்.

76) அல்சர் எனப்படும் குடற்புண் இருப்பவர்கள் தினமும் முட்டைக்கோஸை சூப் செய்து பருகி வந்தால் குடற்புண் மாறும்.

77) கர்ப்பம் தரிக்கும் பெண்களுக்கு வாந்தியும் குமட்டலும் ஏற்பட்டால் பாலில் முட்டை வெள்ளைக்கருவை அடித்துச் சேர்த்து அப்பச்சோடா சிறிது சேர்த்துச் சாப்பிட்டால் வாந்தியும் குமட்டலும் நின்றுவிடும்.

78) இஞ்சியைச் சட்னி செய்து சாப்பிட்டால் உடலில் பித்தமும் கபமும் குறையும்.

79) மார்பகத்தில் பால் சுரப்பதை நிறுத்த வேண்டுமானால் முட்டைக்கோஸை நசுக்கி முலைக்காம்பில் வைத்துக் கட்டினால் பால் சுரப்பது நின்றுவிடும்.

80) சோகை நோய் உள்ளவர்கள் மற்ற உணவுகளைவிட ஈரல் அதிகமாகச் சாப்பிட வேண்டும்.

81) தேமல் உள்ளவர்கள் புடலங்காயை விதை நீக்கி அரைத்து வெடியுப்பைச் சேர்த்து உடலிற் பூசிச் சில மணித்தியாலங் களின் பின் நீராடி வரத் தேமல் இல்லாமற் போகும்.

82) உணவில் உப்பைக் குறைத்தால் இரத்தக் கொதிப்பு வராது.

83) காப்பியையும் ரீயையும் சூடாகச் சாப்பிட்டாலோ அதிகம் குளிரான பானங்களை அருந்தினாலோ விரைவில் குடற் புண் வரும். எதையும் அதிகம் சூடாகவோ அதிகம் குளிராகவோ குடிப்பது உடலுக்குத் தீங்கு தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84) சில குழந்தைகள் எழுந்து நடப்பதற்குத் தாமதமாவதற்குக் காரணம், எலும்புகள் வளர்ச்சி அடையாமையே காரணமாகும். அப்படியான குழந்தைகளுக்கு மீன் எண்ணெய் கொடுப்பதுடன் சூரிய வெளிச்சத்தில் பயிற்சி வழங்குவது அவசியம்.

85) உப்பை அதிகமாக உணவிற் சேர்த்தால் மூளை பாதிப்படையும்.

86) தேகம் பருத்தவர்கள் தேனுடன் எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்த்துச் சாப்பிட்டால் உடற் பருமன் குறையும்.

87) பிள்ளைப் பாக்கியம் இல்லாத பெண்கள் 6மாத காலத்திற்குத் தேன் சாப்பிட்டு வந்தால் பெண் மலட்டுத்தன்மை நீங்கிக் கருத்தரிக்க வாய்ப்பு உண்டாகும்.

88) வாதத்தினால் வரும் மூட்டு நோய்களுக்கு 1 கரண்டி மீன் எண்ணெய் சாப்பிட்டு வந்தால் குணமாகும்.

89) எலி கடித்தால் நன்னாரிப்பச்சை வேரைக் கொண்டு வந்து அரைத்துப் பசுப்பாலிற் கலந்து சாப்பிடுங்கள். எலி கடி விடம் உடம்பில் ஏறாது.

90) பீற்றூட் கிழங்கை அடிக்கடி உணவில் சேர்த்தக் கொள்ளுங்கள். பீற்றூட்டில் இரத்தம் ஊறுவதற்கான சத்து ஏராளமாக இருக்கின்றது. பீற்றூட் இலகுவாக ஜீரணிக்கக் கூடியது.

91) ஒரு பெண் கர்ப்பமாக இருக்கும்போது மாதா மாதம் எடை அதிகரிக்க வேண்டும். 8 மாதங்களில் தனது எடையை 16 கிலோவாக அதிகரித்தால் பிறக்கின்ற குழந்தை ஆரோக்கியமாகப் பிறக்கும்.

92) தினசரி ஒரு வாழைப்பழம் சாப்பிட்டால் ஆயுள் விருத்தி உண்டாகும். நரம்பு வலிமை பெறும். முகம் அழகுறும்.

93) உடம்பில் வலி இருப்பவர்கள் புளியம் இலையை அவித்து அந்நீரிற் குளித்து வந்தால் உடல் வலி நீங்கும்.

94) பெண்களுக்கு அதிகமாகப் புற்றுநோய் மார்பகங்களிலே வருகின்றன. மார்பகங்களில் கெட்டித்தன்மையோ, கட்டியோ வந்தால் உடன் சிகிச்சைபெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95) புகையிலை, பீடி, சிகரட் பாவிப்பதால் உடலில் தொண்ணூற்றியொரு நச்சுப்பொருள் சேர்வதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

96) வீட்டைச் சுற்றி மரங்கள் வளர்க்கக் கூடாது. வடக்குக் கிழக்கில் எக்காரணம் கொண்டும் வீட்டில் மரங்கள் வளர்க்கக் கூடாது. மேற்கில் மரங்கள் வளர்க்கலாம்.

97) தினமும் முருங்கைக் கீரையை உணவில் சேர்த்து வந்தால் கண்ணில் நீர் வடிவது நிற்கும். கண்பார்வை தெளிவடையும். மாலைக்கண் மாறும். கண் சம்பந்தப்பட்ட கோளாறு வராது.

98) கீரை சமையல் செய்யும்போது மிளகாய் சேர்க்கக் கூடாது. உடலுக்கு நல்லதல்ல. மிளகு மட்டும் சேர்க்க வேண்டும்.

99) ஊமத்தை இலையை அரைத்து வெண்ணெயில் குழைத்து தீப்புண்களுக்குப் பூசிவரக் குணமாகும்.

100) குளித்தல், சர்க்கரை கலந்த தயிர், கருப்பஞ் சாறில் தயாரித்த தீன் பண்டம், நல்ல காற்று, இறைச்சிச்சாறு, தூக்கம் இந்த ஆறும் உடல் உறவுக்குப் பின்னர் உடலுக்கு இதந்தரும்.

101) சிற்றின்பங்களாலும் இக சுகங்களாலும் மனிதன் திருப்தி அடைய முடியாது. உள்ளத்தில் குடிகொண்டு இருக்கும் ஆன்மாவைக் காண்பது மேலான இன்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மசாஸ்திர சிரார்த்த காண்டச் சுருக்கம்

## 1. ப்ராயச்சித்தம்

1. செவ்வாய், வியாழன், வெள்ளி, இவ்வாரங்களில் இறந்தால் அந்தந்தக் க்ரஹத்திற்குப் பிரீதியானதை தானம் செய்ய வேண்டும்.

2. கர்மம் செய்ய அதிகாரம் வேண்டி க்ருச்ச்ர தானம் செய்ய வேண்டும்.

3. இறந்து 25 நாழிகைக்குள் தகனம் செய்ய வேண்டும். காலம் அதிக்ரமித்தால் க்ருச்ரதானம் செய்து, பஞ்சகவ்யத்ததால் புரோக்ஷித்துப் பாவன மந்திரங்களால் அபிமந்திரித்துப் பிறகு சுத்த ஜலத்தால் ஸ்நானம் செய்து வைக்கவேண்டும்.

4. தக்ஷிணாயனம், கிருஷ்ணபக்ஷம், ராத்திரி, உச்சிஷ்டம் முதலிய தோஷங்களுக்கு கிருச்ச்ரதானம் செய்ய வேண்டும்.

## 2. ஸம்ஸ்காரம்

1. உபநயனமாகாதவன் வேத மந்திரங்களை உச்சரிக்காமல் தாய் தந்தை கிருத்தியத்தைச் செய்யலாம். சௌளமாகாதவனுக்கு க்ருத்தியத்திற்கு வபனம் கூடாது.

2. பர்த்தாவுக்கு பத்னி கிருத்யம் செய்யும் விஷயத்தில் அவள் பிரசவித்து விட்டாலோ பஹிஷ்ட்டையாகிவிட்டாலோ பிரேதத்தை மந்திரமில்லாமல் தகனம் செய்து தீட்டுப் போனபின் ப்ராஜாபத்ய க்ருச்சரம் செய்து மந்த்ரபூர்வமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகனம் முதலியவற்றைச் செய்ய வேண்டும்.

(பராஜாபத்யக்ருச்ச்ரம் - 10000 காயத்ரீ ஜபம் - 200 பிராணாயாமம்)

### 3. ஸம்ஸ்கார அக்னிகள்

1\. (i) நிர்மதனாக்னியாவது அரணியில் கடைந்தெடுத்தது. அது ஆஹிதாக்னிகளுக்கு.

(ii) ஔபாஸாக்னியாவது தம்பதிகள் ஔபாஸனம் செய்யும் அக்னி

(iii) உத்தபனாக்னியாவது தர்ப்பையில் நெருப்பைக் கொளுத்தி அதிலிருந்து வேறு தர்ப்பைகளில் கொளுத்தி மறுபடியம் மூன்றாந் தடவை கொளுத்தி எடுக்கப்பட்ட அக்னி.

(iv) கபாலாக்னியாவது வாணாயை அடுப்பில் வைத்து அதில் கரியைப்போட்டு நெருப்பு உண்டாக்கியது.

(v) துஷாக்கினியாவது வாணாயை அடுப்பில் வைத்து அதில் உமியைப் போட்டு உண்டாக்கின அக்னி.

2\. (i) தம்பதியாக இறப்பவர்களை தகனம் செய்ய ஔபாஸாக்னி.

(ii) விதுரனையும் விதவையையும் வேத வாதம் முடித்தப் பிறகு கல்யாணம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாதவனையும் தகனம் செய்ய உத்தபனாக்கினி.

(iii) பிரமச்சாரிக்கு கபாலாக்கினி

(iv) குழந்தைகளுக்கும் விவாகமாகாத பெண்களுக்கும் துஷாக்கினி.

(v) புருஷன் ஸந்நியாசம் வாங்கிக்கொண்டிருந்தால் மனைவிக்கு ஔபாஸனாக்னி.

## 4. பிரேதக் கிரியைகள்

*1.* எந்தக் கர்மாவிலும் ஸ்நானம், ஆசமனம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், பிராணாயாமம் இவைகளை பூநூலை வலமாகப் போட்டுக்கொண்டே செய்யவேண்டும்.

*2.* பிரேதத்தைச் சுமப்பவர்கள் பூநூலை மாலையாகப் போட்டுக்கொண்டு போக வேண்டும்.

*3.* ஆவாஹனம், அர்க்கியம், ஸங்கல்பம், பிண்ட ப்ரதானம், திலோதகம், ஆஸனம், பாத்யம் இவைகளின் கோத்திரத்தையும் பெயரையும் சொல்லவேண்டும்.

*4.* மயானத்தில் வன்னிமரத்தின் இலையால் 'அபேதவீத' என்ற மந்திரத்தால் மூன்று தடவை ஸ்தல சுத்தி செய்யவேண்டும்.

*5.* பிரேதத்தை முகத்தையும் உடலையும் மூடிக் கால்பக்கம் துணி வெளியே விடவேண்டும்.

*6.* மயானத்திற்குக் கொண்டுபோகும் வழியில் மூன்று இடங்களில் சவத்தைக் கீழே வைத்துப் பலிபோட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பிரேதத்தின் மேல் வஸ்திரம் இல்லாமல் தகனம் செய்யக்கூடாது. மேலே போட்டிருக்கும் வஸ்திரத்தில் பாதியை மட்டும் கிழித்து எடுத்து விடவேண்டும்.

8. ஆதித்யாபி முகமாய் தகனம் என்பது விசேஷம். மேற்கு முகமாக அக்னி ப்ரதானம் என்பது வழக்கம்.

9. உதகதானம், ஸ்நானம் முதலிய எல்லாம் கனிஷ்டக்ரமமாகச் செய்யவேண்டும். மயானத்திற்குப் போகும்போது கனிஷ்டன் முன்னாலும், வீட்டிற்குத் திரும்பும்போது மூத்தவன் முன்னாலும் போகவேண்டும். ஞாதிகளும் அப்படியே.

10. க்ஷவரம் செய்துகொண்டு ஸ்நானம் செய்து விட்டு வீட்டுவாசலில் நக்ன பிரச்சாதன சிராத்தம் செய்ய வேண்டும். பிறகு நதிக்கரையோ குளக்கரையோ போய் பாஷாண ஸ்தாபனம் செய்து வாஸோதகம் திலோதகம் அளித்துவிட்டு வீட்டுக்கு வந்து வீட்டுக்கு வெளியில் பாஷாண ஸ்தாபனம் செய்து வாஸோதகம் மூன்று செய்து பிறகு பிண்டம், பலி இவைகளைக் கொடுக்க வேண்டும். திலோதகம் முதல் நாள் 3, இரண்டாவது நாள் 4 என்ற கிரமத்தில் 10 நாள் வரை கூட்டிச் செய்ய வேண்டும். 11வது நாள் திலோதகம் இல்லை. பிண்டம் எலுமிச்சை அளவு இருக்க வேண்டும். அதை மண் பாத்திரத்திலாவது பித்தளைப் பாத்திரத்திலாவது பொங்க விட வேண்டும்.

11. உபநயனமாகாதவனுக்குப் பிண்டத்தை பூமியில் வைக்க வேண்டும். ஒரே பிண்டம் வைக்கும் போது குதிரைக் குளம்புப் பிரமாணம். வருஷாப்தீகத்தில் விளாம்பழப் பிரமாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாளயத்தில் இலந்தைப் பழ அளவு. ஏகோதிஷ்டத்திலும் ஸபீண்டிகரணத்திலும் தேங்காய்ப் பிரமாணம். பிண்டத்தை முதல் நாள் வைத்த இடத்திலேயே 10 நாளும் வைக்க வேண்டும்.

12. ஒற்றைப்படை நாட்களில் நவசிராத்தம் நின்று போனால் 11வது நாளில் சேர்த்துச் செய்ய வேண்டும்.

13. கர்த்தாவுக்கும் ஞாதிகளுக்கும் 10 நாள் வரை ஒருவேளை சாப்பாடு, தகனத்தில் வீட்டில் சமையல் செய்து சாப்பிடவும் கூடாது.

14. ஒரு ஸூத்ரக்காரனுக்கு கர்த்தா வேறு ஸூத்ரகானாயிருந்து ஸம்ஸ்காரதிகளைச் செய்தால், இறந்தவனுடைய ஸூத்ரத்தால் முதல் வருஷாப்தீகம் வரை செய்து ஆப்திகம் முதல் கர்த்தா தன் ஸூத்திரத்தினால் செய்ய வேண்டும். ஆனால் யஜுர் வேதிகளுக்கு போதாயன ஸூத்திரத்தால் செய்தாலும் ஸ்வ ஸூத்திரத்தால் செய்தது போலவேயாகும். நடுவில் ஸ்வ ஸூத்திரம் கிடைத்தல் அதைக்கொண்டு மேல் கிரியைகள் நடத்தலாம்.

15. பிறரால் தகனம் செய்யப்பட்ட பிறகு 10 நாளுக்குள்ளாவது 10வது நாளிலாவது பிள்ளை வந்தால் பிண்டோதகம் முதலியவற்றை பாக்கி நாட்களில் செய்ய வேண்டும்.

16. தேசாந்திரம் போனவனைப் பற்றிய செய்தி பன்னிரண்டு வருஷம் வரை தெரியாவிட்டால் இறந்து போயிருப்பான் என்று நம்பி (தாய், தகப்பன் விஷயத்தில் 16வது வருஷத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணபலி செய்து தர்ப்பையைக் கட்டி தகனம் செய்து பிறகு 3 நாட்களில் மற்ற கர்மாக்களைச் செய்யவேண்டும். திதி தெரியாததால் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி, ஏகாதசி, அமாவாசை முதலியவற்றையும், மாதத்திற்கு ஆடி, புரட்டாசி, மாசி ஆகியவற்றையும் வைத்துக்கொள்ளலாம்.

17. துர்மரணத்தை அடைந்தவர்களுக்குக் கிருத்யம் காலாந்தரத்தில் செய்ய வேண்டுமென்றிருந்தாலும் பிராயச்சித்தம் செய்தால் உடனேயும் செய்யலாம்.

## 5. தகனம்

1. மரிக்க வேணும் என்ற இச்சையால் இறந்தவர்களுக்கு மந்திரமில்லாமல் தகனம் செய்ய வேண்டும். தேகம் சாம்பலாகும் வரைதான் தீட்டு. அஸ்தி ஸஞ்சயனம், உதகதானம் இல்லை. 24 நாள், 1½ மாதம், 3 மாதம் அல்லது 6 மாதம் கழித்து நாராயணபலி செய்து கிருத்யம் செய்ய வேண்டும். உடனே செய்ய விரும்பினால் பிராயச்சித்தம் செய்து செய்யலாம். மாதா பிதாக்கள் விஷயத்தில் ஆறு மாதம் சென்று செய்தால் 3 நாள் தீட்டுக் காத்து 4வது நாள் செய்யவேண்டும். மற்றவர்களுக்கு ஒரே நாள் தீட்டு. ஒரு வருஷத்திற்குப் பின் செய்தால் ஒரே நாளில் பிண்டங்களைக் கொடுத்து, மறுநாள் ஏகோதிஷ்டத்தையம் மூன்றாம் நாள் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டும்.

2. வர்ணாச்சிரம தருமங்களிலிருந்து நழுவிய பதிதர்களுக்கு ஸபிண்டீகரணம் கிடையாது.. நாராயணபலி மட்டும் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிறரால் தகனமும் ஸஞ்சயனமும் மந்திர பூர்வமாகச் செய்யப்பட்டபின் புத்திரனாவது வேறு முக்கியஸ்தனாவது கிரியைகள் செய்வதாயிருந்தால் புனர் தகனமில்லை. மந்திரமில்லாமல் தகனம் செய்யப்பட்டவர்களுக்கு மேல் கிரியை தொடங்கு முன் புனர்தகனக் கிரியை மந்திர பூர்வமாகக் கீழே கூறியபடி செய்ய வேண்டும். புரச இலையினாலாவது, தர்ப்பையினாலாவது புருஷாக்ருதியாகச் செய்து தகனம் செய்ய வேண்டும். இதற்கு 'தர்ப்ப ஸம்ஸ்காரம்' என்று பெயர். இறந்தவர்கள் சரீரம் கிடைக்காவிட்டாலும், அங்க வைகல்யம் ஏற்பட்டாலும் தர்ப்ப ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். இதற்குப் பிண்டம் பொங்குதல், வேஷ்டிகொண்டு விசிறுதல், காலைச் சேர்த்துக் கட்டுதல், பிரதக்ஷிணம், நவத்வாரத்தில் நெய்விடுதல், வேஷ்டி போர்த்தல், ஸம்மார்ஜனம், உபஸ்தரணம், தலைவிரித்து முடிதல், அப்பிரதக்ஷணம், பதிபிண்டம் ஆகியவை இல்லை. தகனம் செய்யப்பட்டு ஸஞ்சயனம் செய்யாமலிருந்து 11வது நாள் ஆத்யச்ராத்தமும் செய்யப்படாமலிருந்தால் புனர்தகனம் செய்து மேல்கிரியைகளைச் செய்ய வேண்டும்.

4. ஆணானாலும் பெண்ணாலும் 3 மாதம் பூர்த்தியாவதற்குள் இறந்துபோனால் அவர்களுக்குக் 'கனன ஸம்ஸ்காரம்' அதாவது மண்ணில் புதைக்க வேண்டியது.

5. 24வது மாதம் முதல் உபநயனம வரை துஷாக்னியினால் 'அஸ்மாத் த்வம் அதிஜாதோஸி என்கிற மந்திரத்தால் 'ஏக-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருச' விதிப்படி தகனம், 25வது மாதம் முதல் 36 மாதம் முடிய திலோதகம் பிண்டதானம் உண்டு. 37வது 43வது மாதம் வரை இவற்றுடன் நாராயணபலி உண்டு.

6. 49வது மாதம் முதல் அஸ்த்தி ஸஞ்சயனம் மந்திரமில்லாமல் செய்யவேண்டும். 61வது மாதம் முதல் ஆத்யசிராத்தம் உள்பட எல்லாம் தந்திரமாக மந்திரமில்லாமல் செய்ய வேண்டும் - அதாவது நக்னம், நவசிராத்தம், ஏகோத்திரவ்ருத்தி, வ்ருஷோத்ஸர்ஜனம், ஆத்யம். 85வது மாதம் முதல் மேலே கூறியவற்றுடன் ஷோடசமும் செய்யவேண்டும். 91வது மாதம் முதல் பாஷணஸ்தாபனம் செய்து எல்லாம் மந்திரத்துடன் செய்யவேண்டும்.

7. உபநயனம் முதல் 12வது வயது வரை ஸபிண்டீகரணத்தைத் தவிர்த்து மற்ற தகன, ஸஞ்சயன, வாஸோதக, திலோதக, பிண்டபலிப்ரதான, ஏகோத்திஷ்ட ஷோடசச்ராத்த, நவச்ராத்தங்கள் மந்திரத்துடன் செய்யவேண்டும். 12 வயதுக்குள் புருஷனானாலும், ஸ்திரியானாலும் விவாகமாய்விட்டால் ஸபிண்டீகரணமும் செய்யவேண்டும்.

8. நாலாவது வயது முதல் உபநயனமாகாத ஆணுக்கும் விவாகமாகாத பெண்ணிற்கும் எத்தனை வயதானாலும் நாராயண பலியைத் தவிர ஸபிண்டீகரணம் ஆப்திக ப்ரதியாப்திக சிராத்தங்கள் கிடையாது. துஷாக்னியில் தான் தகனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. நாராயணபலி

ஸந்நியாசிகள் மரணத்திலும் குழந்தைகள் மரணத்திலும் நாராயண பலி செய்யவேண்டும். ஸந்நியாசி மரணம் சுக்லபக்ஷமானால் கேசவாதி 12, விச்வம்பரர் 1 ஆக 13. கிருஷ்ண பக்ஷத்திலானால் ஸங்கர்ணாதி 12, விச்வம்பரர் 1 ஆக 13. குழந்தைகள் மரணத்தில் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், வஸ்வாதி பிதிருக்கள் 1, ப்ரேதராஜா 1, யமன் 1, ப்ரேதநாராயணன் 1, கேசவாதி 1 ஆக 8.

## 7. ஸஞ்சயனம்

(1) அஸ்தி ஸஞ்சனம் 2வது நாள் நடுப்பகலுக்கு முன் செய்யவேண்டும். காலையில் உத்தமம். மத்தியானத்தில் மத்தியமம். பிற்பகலில் அதமம். (2) புனர்தகனத்தில் உடனே ஸஞ்சயனம். பாலினால் புரோக்ஷித்து அவஸ்ருஜேதி மந்திரங்களால் மூன்று ஆஜ்யாஹுதிகள் செய்து 'உத்திஷ்டக' என்ற மந்திரஜபம். மற்றவை ஸமானம்.

## 8. கர்த்ருக்ரமம்

(1) தன் வயிற்றில் பிறந்த புத்திரன் (2) புத்திரனுடைய புத்திரன் (3) புத்திரனுடைய புத்திரனுடைய புத்திரன் (4) தான் தத்தெடுத்துக்கொண்ட புத்திரன் (5) அவனுடைய புத்திரன் (6) பிறனுக்கு தத்துக்கொடுத்த புத்திரன் (7) தன் சொத்துக்குரிய பெண் வயிற்றுப் பேரன் (8) பொதுவாக பெண் வயிற்றுப் பேரன் (9) பாகம் பிரியாத ஸபத்னிபுத்திரன் (10) பதி (11) பாகம் பிரித்த ஸபத்னீ புத்திரன் (12) புத்ரி (13) தம்பி (14) சகோதர புத்திரர்கள் உள்ளவர்களில் பெரியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(15)* மாற்றாந்தாய் வயிற்று சகோதரன் *(16)* அவன் புத்திரன் *(17)* தந்தை *(18)* தமயன் *(19)* தாய் *(20)* நாட்டுப் பெண் *(21)* பிள்ளையின் பெண் *(22)* பெண்ணின் புத்திரி *(23)* பிள்ளை வயிற்றுப் பேரனுடைய பத்னி *(24)* அவன் புத்ரி *(25)* தத்துப் புத்திரர்களின் பத்னி *(26)* சகோதரி *(27)* சகோதரியின் புத்திரன் *(28)* ஸபிண்டன் *(29)* ஸமானோதகர் *(30)* மாத்ருஸபிண்டன் *(31)* மாத்ருஸமானோதகன் *(32)* சிஷ்யன் *(33)* மாப்பிள்ளை *(34)* சிநேகிதன்

ஸ்திரீ விஷயத்தில் *13, 14* முதலிய இடங்களில் கீழே காட்டியபடி 'பர்த்தாவின்' என்று முன்கூட்டி மாற்றிகொள்ள வேண்டும். *(13)* பர்த்தாவின் தம்பி *(14)* பர்த்தாவின் சகோதரர்களின் புத்திரர்களுள் மூத்தவன் *(15)* பர்த்தாவின் மாற்றாந்தாய் வயிற்று சகோதரன் *(16)* அவன் புத்திரன் *(17)* பர்த்தாவின் தந்தை *(18)* பர்த்தாவின் தமையன் *(19)* பர்த்தாவின் தாய் *(27)* பர்த்தாவின் சகோதரி மகன் - இறந்தவளின் சகோதரி மகன், இறந்தவளின் சகோதரனுடைய மகன்.

## 9. சிலாதிவிபர்யாஸம்

கிருத்யம் செய்துகொண்டிருக்கும்போது வாஸோதக வஸ்திரம், பிண்டம் பொங்கும் பாத்திரம், கைசொம்பு, நட்டகல் இவைகள் காணாமல் போனால், கடந்துபோன பிண்ட திலோதகங்களை மறுபடி செய்யவேண்டும். பிண்டம் உடைந்து போனால் வேறு பிண்டம் வைக்க வேண்டும். கர்த்தா வேறுபட்டால் முன் நட்ட கல்லை அகற்றிவிட்டு வேறு கல் நட்டு அடிமுதல் எல்லாவற்றையும் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ப்ரபூதம்

அமாவாசை ஸங்கிரமணம் முதலியவற்றிற்காக நடுவில் கிரியைகளை முடித்துவிட்டாலும் ப்ரபூத பலி ப்ரதானம், பாஷாணோத்தாபனம் இவைகளை மட்டும் 10வது தினத்திலேயே செய்யவேண்டியது.

## 11. உதகதானம்

*1. அவரவர்களுக்கு ஏற்பட்ட தீட்டு முடிந்ததும் உதகதானம் செய்ய வேண்டும்.*

*2. தாய் தகப்பன் தவிர மற்றவர்களுக்கு அமாவாசை ஸங்கிரமணம் நடுவில் வந்தால் அதற்கு முன்பே கிரியைகளை முடித்துவிடவேண்டும். ஞாதிகளும் உதகதானத்தை முடித்துவிட வேண்டும். ஸங்கிரமணம் ஆகியவற்றிற்குப் பிறகு கிருத்யம் ஆரம்பித்தால் கிரமப்படி செய்யவேண்டியது. ஆனால் முந்தியே முடிப்பது உத்தமம், கர்த்தாவோடு ஞாதிகள் உதகதானத்தை முடிக்காமல் 10வது நாளில் செய்வதாயிருந்தால் பாஷாண ஸ்தாபன குண்டலத்தில் செய்யக்கூடாது என்பது ஆசாரம். 10 தீட்டுக்குள்ளவர்கள் 3வது தினத்திலும் உதகதாகம் செய்யவேண்டும். உதகதாகம் செய்ய மறந்துபோனால் மறுநாள் உதகதாகம் செய்து அன்றும் தீட்டுக் காக்கவேண்டும்.*

*3. நடுவில் அமாவாசை ஸங்கிரமணத்திற்குப் பிறகு வந்தாலும் முன்வந்தாலும் அமாவாசையன்றே கிரியையைப் பூர்த்தி செய்யவேண்டும். ஞாதிகளும் முடித்துவிட வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தகப்பனுடைய 10 நாள் கிரியையின் மத்தியில் தாயின் மரணம் ஏற்பட்டால் தகப்பனுடைய 10வது தினத்திலேயே தாயின் உதக பிண்டஸமாபனம் செய்ய வேண்டும்.

## 12. ஸோதகும்பம்

மரணதினம் முதல் 12வது நாளில் துவக்கி ஆப்திகம் வரையில் மாஸிக. ஊன மாஸிக தினங்கள் தவிர மற்ற நாட்களில் செய்ய வேண்டியது. அது இயலாவிட்டால் மாஸிகத்திற்கு முன்தினம் செய்யவேண்டியது.

## 13. ஊனமாஸிகமும் - மாஸிகமும்

1. (1) 27வது நாளுக்கு மேல் 30 நாளுக்குள்ளும் (2) 40க்கு மேல் 45 நாளுக்குள்ளும் (3) 170க்கு மேல் 180 நாளுக்குள்ளும் (4) 340க்கு மேல் 355 நாளுக்குள் ஊனமாஸி கங்களைச் செய்யவேண்டும்.

2. மாஸிகத்தை ஒவ்வொரு மாதமும் இறந்த திதியில் செய்யவேண்டும். ஸபிண்டீகரணத்திற்கு முன் செய்யும் மாஸிகத்தை ஏகோத்திஷ்டமாகவும் பின் செய்வதை சிராத்தம் போலவும் செய்யவேண்டும். தீட்டினால் நின்றுபோன மாஸிகத்தைத் தீட்டுப்போன தினத்தில் செய்யவேண்டும். 12வது மாஸிகமும் ஆப்திகமும் சேர்ந்துவந்தால் ஆப்திகத்தை மட்டும் செய்யவேண்டும்.

## 14. ச்ராத்தம்

பிதா, மாதா, ஸபத்னீமாதா, பிதாமஹன், மாதாமஹீ, ப்ரபிதாமஹன், ப்ரபிதாமஹி, ஸீமந்தஜ்யேஷ்டன், மாதாமஹன், மாதாமஹீ, பித்ருவ்யன், அவர்கள் சிராத்தத்தில் ஹோமமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்திரீகள் செய்யும் சிராத்தத்தில் ஹோமமில்லை. ஆவாஹனம், ஆர்க்கியம், விகிதம், பிண்ட ப்ரதானம் ஆகியவவையும் இல்லை.

2. **பார்வண** சிராத்தம் என்பது 3 பேர்களை உத்தேசித்த சிராத்தம். **ஏகோத்திஷ்டம்** ஒருவரை உத்தேசித்த சிராத்தம். பார்வணமும் ஏகோத்திஷ்டமும் ஒன்று சேர்ந்தால் பார்வணத்தை முந்தியும் ஏகோத்திஷ்டத்தைப் பிந்தியும் வெவ்வேறு சமையலில் செய்யவேண்டும்.

3. தாய் தகப்பன் சிராத்தங்கள் ஒரே திதியானாலும் திதி த்வயத்தால் ஒன்றாக வந்தாலும் தீட்டுப்போகும் தினத்தில் ஒன்றாக வந்தாலும் ஒரே சமையலில் தகப்பன் சிராத்தம் முந்தியும் தாய் சிராத்தம் பிந்தியும் செய்யவேண்டும்.

4. தாய் தந்தையின் க்ருத்யம் செய்துகொண்டிருக்கும்போது நின்றுபோன சிராத்தத்தை ஸபிண்டீகரணத்திற்குப் பின் செய்யவேண்டும். மற்றவர்களுக்குக் கிருத்யம் செய்யும்போது வந்தால் ஆத்யசிராத்தத்திற்குப் பின் செய்ய வேண்டும். மாதா பிதாக்களின் ஸபிண்டீகரணம் காரணவசத்தால் தாமதித்தால் 12வது நாளில் இதரர்களின் சிராத்தத்தைச் செய்துவிடலாம்.

5. ஒரே நாளில் ஒரே பித்ருக்களை உத்தேசித்து 2 சிராத்தங்கள் செய்யக்கூடாது. நித்தியமும் நைமித்திகமும் சேர்ந்தால் நைமித்திகத்தைச் செய்வதாலேயே நித்தியமும் சித்தித்துவிடும். நித்தியம் என்பது நிச்சயமாக வருவது. அமாவாசை ஸங்கிரமணம் முதலியவை நைமித்திகம் க்ரஹணம், அர்த்தோயதம் மஹோதயம் முதலியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஒவ்வொருவருக்கும் அவரவர் இறந்துபோன மாதத்தில் பக்ஷத்தில் திதியில் வருஷந்தோறும் ப்ரத்யாப்திக சிராத்தம் செய்யவேண்டும்.

7. சிராத்தத்தில் ஸமான கோத்திரத்தைச் சேர்ந்தவர்களை பிராம்மணர்களாக நிமந்த்ரணம் செய்யக்கூடாது. ஸோதகும்பத்திற்குப் பாதகமில்லை.

8. பிராம்மணர்களுக்குப் பாத ப்ரக்ஷாலணம் உட்கார்ந்துகொண்டு செய்யவேண்டும்.

9. ஹோமத்தில் மிகுந்த நெய்யால் பாத்ராபிகாரம் அன்னாபகாரம் செய்யக்கூடாது.

10. தர்ப்ப பவித்ர பாணியாய்க் காலலம்பவும் சந்தனம் பூசவும் கூடாது.

11. வஸ்திரமில்லாத பக்ஷத்தில் யக்ஞோபவீதமாவது கொடுக்கவேண்டும்.

12. சிராத்தத்தில் பிராம்மணர்கள் போஜனம் செய்த இலைகளை ஸ்வஸ்திவாசனத்திற்கு முன் எடுக்கவேண்டும். பிண்டப் பிரதானத்திற்குப் பின் ஸ்தலசுத்தி செய்யவேண்டும். இலைகளை பூமியில் புதைக்க வேண்டும்.

13. பிராம்மணர்கள் காலலம்பின பிறகு கர்த்தா முந்தி ஆசமனீயம் செய்யவேண்டும். விச்வேதேவ பிராம்மணர் முதலிலும் பிதிருவரண பிராம்மணர் பிறகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ஏகோத்திஷ்டம், ஸபிண்டீகரணம், மாஸிகம் அனுமாஸிகம், க்ஷோடசம், நவசிராத்தம் இவைகளில் அபிச்ரவணம் இல்லை.

15. பிண்டப் பிரதானத்தில் நடுப்பிண்டத்தைக் கர்த்தா கர்ப்பமாகாத பத்னிக்குக் கொடுத்துச் சாப்பிடச் சொல்லலாம். பிண்டங்களை ஜலத்தில் போட்டுவிட வேண்டும்.

16. சிராத்த கர்த்தாவுக்கும் புருஷன் சிராந்தத்தில் விதவைக்கும் ஏகாதசியில் உபவாஸ நியமில்லை.

17. நிமிந்த்ரணம் சாப்பிட்டவர்கள் பத்துதடவை காயத்ரியினால் ஜலத்தைச் சாப்பிட்டுவிட்டுப் பிறகு மாலை ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும். ஔபாஸனத்தை மற்றொருவரைக் கொண்டு செய்யவேண்டும்.

18. ஹோமத்துடன் செய்கிற சிராத்தங்களுக்கெல்லாம் அங்கமான தர்ப்பணம் உண்டு. மாதா பிதாக்களின் சிராத்தத்திலும் ஸக்ருன் மஹாலயத்திலும் அங்கதர்ப்பணம் மறுநாளிலும், மற்ற சிராத்தங்களில் சிராத்த தினத்தன்றும் செய்ய வேண்டும். கர்த்தாவின் தகப்பன் ஜீவித்திருந்தால் சிராத்தாங்க தர்ப்பணம் இல்லை. ஸபிண்டீகரணம் அனுமாஸிகம், நாந்தீ சிராத்தம், சிராத்த சேஷமான எள்ளையும் தர்ப்பையையும் வைத்திருந்து பரேஹனி (மறு நாள்) தர்ப்பணம் சூரியோதயத்திற்கு முன்: சூரியோதயத்திற்குப் பின் செய்ய நேரிட்டால் ஸந்தியாவந்தனத்திற்குப் பின்னும் ஔபாஸனத்திற்கு முன்னும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. தர்ப்பணம்

1. அமாவாசையும் ஸங்கரமணமும் ஒன்றாக வந்தால் ஸங்க்ரமண தர்ப்பணம் செய்தால் போதும். அர்த்தோதயம், மகோதயம் அமாவாசையுடன் வந்தால் அர்த்தோதயம் அல்லது மகோதயத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

2. ஸூர்ய சந்திர கிரகண காலங்களில் தர்ப்பணம் செய்யவேண்டும். ஜனனமரண ஆசௌச காலத்தில் கிரகணம் வந்தால் கிரகணம் முடியும் வரை சுத்தி தானம் தர்ப்பணம் செய்யலாம்.

3. தந்தை ஜீவித்திருந்தால் பொதுவாகப் பித்ரு காரியங்களில் அதிகாரம் இல்லாவிட்டாலும், பித்ரு யாக்ஞும், நாந்தீ சிராத்தம் இவைகளைச் செய்யவேண்டும். தகப்பன் செய்வதில் யார் யார் தேவதைகளோ அவர்கள் தான் இவனுக்கும் தேவதைகள்.

4. எள் எடுக்கும்போது ஆள்காட்டி விரலைச் சேர்க்கக்கூடாது.

5. மஹாலய பக்ஷத்தில் வரும் பரணிக்கு "மஹா பரணி" என்றும் தரயோதசிக்கு "கஜச்சாயை" என்றும், மத்யாஷ்டமிக்கு "கயை" என்று பெயர். இவைகளிற் செய்யும் சிராத்தமும் தர்ப்பணமும் கயையில் செய்ததற்குச் சமம்.

6. மஹாலய சிராத்தத்தை அன்ன ரூபமாய்ச் செய்பவர்களும் ஹிரண்ய ரூபமாய்ச் செய்பவர்களும் பிரதி வருஹம் அவ்வாறே செய்யவேண்டும் என்ற நியமமில்லை. தேசகாலசக்தியனுசாரமாய்ச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மஹாலயத்தில் காருணீக பித்திருக்கள் எனப்படும் பின்வருபவர்களை உத்தேசித்தும் சிராத்தமோ தர்ப்பணமோ செய்யவேண்டும். :- இறந்துபோன சிறிய தகப்பன், பெரிய தகப்பன், தமயன் தம்பி, பிள்ளை, அத்தை, அம்மான், பெரியதாயார், சிறியதாயார் சகோதரி, சகோதரி புத்திரிகள், மனைவி, மாமனார். அத்திம்பேர், நாட்டுப் பெண், மைத்துனன், ஸ்நேகிதன் யஜமானன் குரு.

8. ஸந்நியாஸியின் மஹாலயத்தை துவாதசியில் தான் செய்யவேண்டும். மற்ற திதிகளில் செய்யக்கூடாது. மற்றவர்களுக்கு துவாதசியிலும் செய்யலாம்.

9. ஆயுதங்களால் துர்மரணமடைந்தவர்களுக்கு சதுர்த்தசியில்தான் செய்யவேண்டும். மற்ற திதிகளில் கூடாது. மற்றவர்களுக்கும் அந்த திதிகூடாது.

10. தாய் தந்தைகளின் சிராத்தம் வருகிற மாதத்தில் சிராத்திற்கு முன் மஹாலய சிராத்தமாவது தர்ப்பணமாவது செய்யக்கூடாது.

## 16. நாந்தீ

1. நாந்தீசிராத்தம் பின்வரும் சமயங்களில் செய்ய வேண்டும். :-

கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், உபநயனம், முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாகர்மம் ப்ராஜாபத்யாதிவ்ரதம், ஸமாவர்த்தனம், விவாஹம், பிரதிஷ்ட்டை, கிருஹப்ரவேசம், ஆசரம ஸ்வீகாரம் யக்ஞம். இதை ஆமமாயாவது. ஹிரண்யமாயாவது செய்யலாம். எள்ளுக்கு பதில் அக்ஷதை உபயோகிக்கவேண்டும்.

2. நாந்தீ செய்த 6 நாட்களுக்குள் இன்னொரு நாந்தி செய்யக்கூடாது.

3. நாந்தீசிராத்தத்தில் ஒவ்வொரு வரணத்திற்கும் இரண்டு பிராம்மணர்கள். "வ்ருத்திச்ராத்தே விவாஹே சப்ரபிதாமஹபூர்வகம்" என்ற வசனப்படி ப்ரபிதாமஹ-பிதாமஹஸ்ரீபித்ரு என்ற வரிசையில் வரிக்கவேண்டும். முதலில் மாத்ருவரணம் பிறகு பித்ருவரணம்.

4. பிதா, பிராதா ஒருவனுமில்லாதவனுக்கு அன்னயள உபநயனம் செய்வித்தால், உபநயனம் செய்யப்படுபவனுடைய பித்ருக்களை உத்தேசித்து அவனே நாந்தீசிராத்தம் செய்யவேண்டும். பிதா, பிராதா இல்லாதவனுக்கு அன்னியன் ஆசாரியனாக இருந்து விரதஸமாபனம் செய்வித்தால் அந்த ஆசாரியனுடைய பித்ருக்கள் சிராத்த தேவதைகளாவார்கள்.

5. தந்தை ஜீவித்திருப்பவன் நாந்தீ செய்தால் அவனுக்குத் தாயார் இல்லாவிடினும், தந்தை யார் யாரை உத்தேசித்துச் செய்வாரோ அவர்களே சிராத்த தேவதைகளாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடலை விட்ட பின் ஆன்மாவின் நிலை

மரணம் என்பது வாழ்வின் முடிவு அல்ல. அதில் ஏற்படும் ஒரு நிலை (Stage) தான். ஆதலால், இந்த உடலை விட்டு நீங்கியதும், ஆன்மாவிற்கு என்ன ஏற்படுகிறது என்பதை அறிந்து கொள்வதும் அவசியமல்லவா? அதனை கீழ்க் கண்டவாறு நமது பண்டைய நூல்கள் விளக்கி உள்ளன.

இந்த உடலை நீத்த பிறகு 10 நாட்கள் அந்த ஜீவனுக்கு சரீரம் இல்லாவிட்டாலும் பசியும், தாகமும் கடுமையாக இருக்கும். ஆதலால் அந்த 10 நாட்களும் அந்த ஜீவனுக்கு உணவும் நீரும் அளிக்க வேண்டியது இறந்தவரின் புத்திரர்களின் கடமை ஆகும். இதற்கான வழிமுறைகளை பெரியோர்க ளிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்.

உடலை நீத்த 10வது தினம், அந்த ஜீவனுக்கு, "சூட்சும சரீரம்" கிடைத்து மேலுலக, பயணத்தை அது தொடங்கி விடுகிறது. தனது பூவுலக வாழ்வு காலத்தில் அந்த ஜீவன் செய்துள்ள நற்பலன்களுக்கு ஏற்ப நல்லுலகை அடைவதற்கு அந்த ஜீவனுக்கு ஒரு வருட காலமாகிறது. இந்த ஒரு வருட காலமும் அவ்வப்போது அந்த ஜீவனுக்கு, வழியில் பல உலகங்களைக் கடந்து செல்லும்போது, தேவையான உணவு, நீர் ஆகியவற்றை இங்கு திதிகள் செய்வதின் மந்திர சக்தியினால் சூரியனின் மூலம், அந்த ஜீவனை சென்று அடைகின்றன. இதனால், திருப்தியும், மகிழ்ச்சியும் அடைந்த, களைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் நல்லுலகிற்கு, பயணம் செய்து கொண்டிருக்கும் அந்த ஜீவன் நம்மை ஆசீர்வதிக்கும் நற்பலனை பித்ரு தேவதைகள் நமக்கு சேர்த்து விடுகின்றனர்.

குடும்பத்தில் பணக்கஷ்டம் ஏற்படும் போது செல்வமாகவும் உடல் உபாதை ஏற்படும் போது ஔஷதமாகவும், குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றை தீர்த்தும், இந்த நற்பலன்கள் நமக்கு உதவுகின்றன. ஆதலால்தான் பித்ருக்களை பூஜை செய்வது நமது நன்மைக்காகவே என புராதன நூல்கள் வலியுறுத்தி விளக்கி உள்ளன. சிரத்தையுடன் செய்யப்பட வேண்டியதால் சிரார்த்தம் எனப்படுகிறது இப்பூஜை.

பித்ருக்களை மறப்பதும், அவர்களுக்கு நாம் நன்றியுடன் செய்ய வேண்டிய திதி, தர்ப்பணம் ஆகியவற்றை விட்டு விடுவதும் மகத்தான தவறுகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகன ஸம்ஸ்காரத்திற்குத் தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| சந்தனம் | 25 கிராம் |
| அத்தர் | 01 சீசா |
| பன்னீர் | 1/2 போத்தல் |
| அரிசி மா | 50 கிராம் |
| சம்பக்கூட்டு | 25 கிராம் |
| மஞ்சள் மா | 50 கிராம் |
| சந்தனக் கட்டை | |
| சமித்துக்கட்டு (அல்லது மாஞ்சமித்து) | 03 |
| ஊதுபத்தி | 01 பைக்கற்று |
| கற்பூரம் | 05 பைக்கற்று |
| நல்லெண்ணெய் | 02 அவுன்ஸ் |
| அரப்பு | 50 கிராம் |
| கறுப்பு எள்ளு | 100 கிராம் |
| தேன் | 02 அவுன்ஸ் |
| பசுநெய் | 1/4 போத்தல் |
| தர்ப்பை (தலைப்புள்ளது) | 100 |
| மண்பானை (சிறிது) | 01 |
| மண்சட்டி | 02 |
| வாழைப்பழம் | 01 கிலோ |
| வெற்றிலை | 25 |
| பாக்கு | 1/4 கிலோ |
| மாம்பழம் | 01 |
| தோடம்பழம் | 01 |
| தேசிக்காய் | 01 |
| காரிக்கன்துணி | 10 மீற்றர் |
| வேட்டி | 01 (கர்த்தாவிற்கு) |
| பச்சரிசி | 01 கிலோ |
| பால் | 1/2 போத்தல் |

| | |
|---|---|
| இளநீர் | |
| பூமாலை (கன்னிப்பெண், பிரமச்சாரி, சுமங்கலி, சுமங்கலன்) | |
| துளசிமாலை (விதுரன், விதவை) | |
| பிரேதத்திற்குக் கட்டுதற்குரிய உடுப்பு | |
| சில்லறைக்காக | 100 ரூபா |
| உமி | |
| ஓமத்தட்டு | |
| அத்திக்கொப்பு | |
| வட்டகை (அல்லது மண்சிட்டி) | 06 |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| தட்டம் | 02 |
| கற்பூரத்தட்டு | |
| செம்பு | 01 |
| சொரிபூ | |
| சொரி துளசி | |
| மாவிலை | |
| நெய்ப்பந்தம் (பேரப்பிள்ளைகள் பிடிப்பதற்கு) | |
| பச்சைத் தென்னோலையில் பின்னிய பன்னாங்குத் தட்டு | |
| ஆசந்தி (பிரேதம் கொண்டு போவதற்குப் பாடை) | |
| அக்கினி, சரு கொண்டு போவதற்கு தென்னம் மட்டையில் உறி | |
| பிரேத சம்ஸ்காரம் செய்யும் இடத்தில் சரு (அரிசி) பொங்குவதற்கு 3 கல்லு, விறகு | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு : மகவாசத்தை (கையில் கட்டிய கோடித்துணி) தசாகம்வரை கவனமாகப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்.

சுண்ணமிடித்தல்: வைதிக கர்மாவில் சுண்ணமிடித்தல் சொல்லப்படவில்லையெனினும் தேசவழமை காரணமாகப் பல இடங்களில் அது வழக்கிலுண்டு. சுண்ணமிடித்தல் செய்யப்பட வேண்டுமெனில் அதற்குரிய உரல், உலக்கை, அருகம்புல், மஞ்சள்மா, சுண்ணாம்பு, நல்லெண்ணெய், வெள்ளைத்துணி (சிறிய துண்டு) என்பவற்றைச் சேகரத்துக் கொள்ளவேண்டும்.

## மயானத்துக்கு கொண்டுபோக வேண்டிய பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| எள் | | | வெற்றிலை, பாக்கு |
| பச்சரிசி | | | சில்லறைக்காசு |
| அத்திக்கொப்பு | | | தாள்காசு |
| நெய் | 02 | அவுன்ஸ் | வாளி, கயிறு |
| வட்டகை | 02 | | சரு |
| (அல்லது மண்சிட்டி) | | | ஹோமாக்னி - சரு |
| தர்ப்பை (தலைப்புள்ளது) | 15 | | செம்பு - தண்ணீருடன் |
| பானை | 01 | | பெரிய கத்தி |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | | | |

## நக்ன தானம்

| | |
|---|---|
| எள் (சிறிதளவு) | ஒருவேட்டியில் அரிசி, |
| துளசி | காய்கறி முதலியவற்றை |
| தர்ப்பை | வைத்துக் கட்டிய முடிச்சு |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| தீபம் | தானம் கொடுப்பதற்கு ஒரு |
| ஜலபாத்திரம் | பிராமணர் |
| வெற்றிலை, பாக்கு | |
| தக்ஷிணை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஷாணஸ் தாபனம்

தகன சம்ஸ்காரம் செய்த அன்றே பாஷாண ஸ்தாபனம் செய்யவேண்டும். தவறின் 10ம் நாள் செய்ய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| கருங்கற் சல்லி | 03 | எள்ளு | 100 கிராம் |
| சொரிதுளசி | | மண்சட்டி | 02 |
| சில்லறைக்காக | | மண்பானை | 01 |
| தர்ப்பை (நுனியுள்ளது) | | உறி | 01 |
| பித்தளைச் சட்டி | 01 | திருகணை | 01 |
| கரண்டி | 01 | தீட்டல் பச்சரிசி | 01 கிலோ |
| செம்பு | 01 | பால் | 1/4 போ |
| குத்துவிளக்கு | | தயிர் | |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | | இளநீர் | |
| தட்டம் | 02 | அரிசிமா | 25 கிராம் |
| அரிசிமா (ரொட்டிக்கு) | | மஞ்சள்மா | 25 கிராம் |
| சந்தனம் | 25 கிராம் | பன்னீர் | 1/2 போத்தல் |
| கற்பூரம் | 01 பைக்கற் | மாம்பழம் | 01 |
| ஊதுபத்தி | 01 பைக்கற் | தேன் | 02 அவுன்ஸ் |
| பழம் | 05 | பசுநெய் | 02 அவுன்ஸ் |
| பாக்கு | 05 | தோடம்பழம் | 01 |
| வெற்றிலை | 05 | | |

1. பித்தளைச் சட்டியும் கரண்டியும் அரிசி (பிண்டம்) பொங்குவதற்கு. இந்தச் சட்டியும் கரண்டியும் சபீண்டீகரணத்தன்று (12ம் நாள்) நிமித்தருக்குக் கொடுக்க வேண்டும்.

2. பாஷாணம் ஸ்தாபித்த இடத்துக்கு அருகில் பிண்டத்துக்குரிய அரிசியைப் பொங்கவேண்டும். அதற்காக அடுப்பு ஒன்று தயார்செய்ய வேண்டும். பிண்டம் - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தனி அரிசிமாவைக் குழைத்து அதே அடுப்பின் தணலில் ரொட்டியை வேகவைத்து எடுக்கவேண்டும். ரொட்டி - 2

4. பாஷாணஸ்தாபனத்திற்காக ஒரு அடி ஆழமுடைய வ்ருத்த குண்டம் ஒன்று தோண்டவேண்டும்.

5. ஒரு மண்சட்டிக்கு அடியில் மூன்று பெரிய துவாரம் இடவேண்டும்.


பானைக்கு அடியில் ஒரு சிறிய துவாரம் இடவேண்டும்.

6. எள் சேர்த்து இரண்டு பிண்டம், கோழிமுட்டைப் ப்ரமாணம்.

7. ஒரு பாத்திரத்தில் ஜலம்.

8. பாஷாண ஸ்தாபனத்தன்று அபிஷேகத்திற்குரிய எந்தெந்த த்ரவியங்களைப் பயன்படுத்துகின்றோமோ அதேபோல் தினமும் அபிஷேகம் செய்யவேண்டும்.

9. வாசோதகம் தினமும் மூன்று செய்யவேண்டும். (மொத்தம் 30) திலோதகம் முதலாவது நாளில் 3. இரண்டாவது நாளில் 4. இவ்விதம் தினமும் ஒவ்வொன்று கூட்டிச் செய்யவேண்டும். (மொத்தம் 75)




1. பாஷாணஸ்தாபன குண்டம்
2. குத்துவிளக்கு
3. கர்த்தா
4. வாத்தியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சயனத்திற்குத் தேவையான பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| நெய் | 1/4 போத்தல் | ஊதுபத்தி | 01 பைக்கற் |
| சமித்து | 02 கட்டு | வெற்றிலை | 10 |
| | அல்லது மாஞ்சமித்து | பாக்கு | 10 |
| தர்ப்பை | 15 (நுனியுள்ளது) | சொரிதுளசி | |
| நவதானியம் | 05 கிராம் | வாழையிலை | 03 |
| நெற்பொரி | 50 கிராம் | பானை | 01 |
| எள்ளு | 01 பிடி | கோடிச்சால்வை | 01 |
| பன்னீர் | 1/2 போத்தல் | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| அரிசிமா | 50 கிராம் | செம்பு | 01 |
| மஞ்சள் மா | 50 கிராம் | வட்டகை | 02 |
| மாம்பழம் | 01 | | (அல்லது மண்சிட்டி) |
| தோடம்பழம் | 01 | அத்திக்கொப்பு | |
| தேசிக்காய் | 01 | கண்டங்கத்தரிக்காய் 01 | |
| நல்லெண்ணெய் | 02 அவு | கறுப்பு/நீல நிறநூல் | |
| அரப்பு | சிறிதளவு | உமி | சிறிதளவு |
| சர்க்கரை | சிறிதளவு | தீப்பந்தம் | 01 |
| பால் | 1/2 போத்தல் | துளசிச்செடி | 01 |
| தயிர் | | ரொட்டி | 05 |
| இளநீர் | 02 | அவித்த பயறு | |
| தேன் | 02 அவு | மண்வெட்டி | |
| வாழைப்பழம் | 01 கிலோ | வாளி - கயிறு | |
| சூடம் | 05 பைக்கற் | பெரிய வாளி | 02 |
| | | (தண்ணீர் எடுக்க) | |

1. ரொட்டி அரிசிமாவைக் குழைத்துத் தணலில் வேகவைத்து எடுக்கவேண்டும்.

2. முகவாசத்தை (கையில் கட்டிய துணி) சஞ்சயனத்திற்குப் புறப்படும்போது இடது கையில் கட்டிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகன தினத்தன்று பாஷாண ஸ்தாபனம் செய்திருப்பின் தசாகத்திற்குத் (10ம் நாள்) தேவையான பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| நாலுமுழ வேட்டி | 01 | **படையலுக்கு:** | |
| சால்வைத்துண்டு | 01 | பச்சரிசிச் சாதம் | |
| பூமாலை | 01 | குத்தரிசிச்சாதம் | |
| துளசிமாலை | 01 | சகல கறிவகைகள் | |
| நெல் | சிறிதளவு | சகல பலகார பக்ஷணவகைகள் | |
| கோமயம் | சிறிதளவு | சகல பழவகைகள் | |
| பச்சரிசிச் சாதம் (பிரபூத பலிக்கு) | | விரும்பிய சாப்பாட்டு வகைகள் | |
| பெரிய கடகம் | 01 | குடை | |
| நெய்ப்பந்தம் | 01 | கொடி | வெள்ளைக் கோடித்துணியில் செய்யவேண்டும் |
| தொன்னைகள் | 30 | ஆலவட்டம் | வெள்ளைக் கோடித்துணியில் செய்யவேண்டும் |

வழமைபோல அபிஷேகத்துக்குரிய பொருட்களும் பிண்டத்திற்குச் சாதமும் ரொட்டி போன்ற பொருட்களும் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாக தினத்தன்று (10ம் நாள்) பாஷாண ஸ்தாபனம் செய்வதாயின் தேவையான பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| கருங்கற் சல்லி | 03 | பசுநெய் | 02 அவுன்ஸ் |
| சொரிதுளசி | | தோடம்பழம் | 01 |
| சில்லறைக்காசு | 50 | நாலுமுழ வேட்டி | 01 |
| தர்ப்பை (நுனியுள்ளது) | 100 | சால்வைத்துண்டு | 01 |
| பித்தளைச் சட்டி | 01 | பூமாலை | 01 |
| கரண்டி | 01 | துளசிமாலை | 01 |
| செம்பு | 01 | நெல் | சிறிதளவு |
| குத்துவிளக்கு | | கோமயம் | சிறிதளவு |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | | பச்சரிசிச் சாதம் (பிரபூத பலிக்கு) | |
| தட்டம் | 02 | | |
| அரிசிமா (ரொட்டிக்கு) | | பெரிய கடகம் | 01 |
| சந்தனம் | 25 கிராம் | நெய்ப்பந்தம் | 01 |
| கற்பூரம் | 05 பைக்கற் | தொன்னைகள் | 30 |
| ஊதுபத்தி | 01 பைக்கற் | | |
| வாழைப்பழம் | 01 கிலோ | **படையலுக்கு** | |
| பாக்கு | 1/4 கிலோ | பச்சரிசிச் சாதம் | |
| வெற்றிலை | 25 | குத்தரிசிச்சாதம் | |
| எள்ளு | 1/4 கிலோ | சகல கறிவகைகள் | |
| மண்சட்டி | 02 | சகல பலகார பக்ஷணவகைகள் | |
| திருகணை | 01 | சகல பழவகைகள் | |
| பால் | 1/4 போத்தல் | விரும்பிய சாப்பாட்டு வகைகள் | |
| தயிர் | | | |
| இளநீர் | 02 | குடை | வெள்ளைக் |
| அரிசிமா | 25 கிராம் | கொடி | கோடித்துணியில் |
| மஞ்சள்மா | 25 கிராம் | ஆலவட்டம் | செய்யவேண்டும் |
| பன்னீர் | 1/2 போத்தல் | ரொட்டி | 05 |
| மாம்பழம் | 01 | பிண்டம் | 20 |
| தேன் | 02 அவுன்ஸ் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பித்தளைச் சட்டியும் கரண்டியும் அரிசி (பிண்டம்) பொங்குவதற்கு.
1/2 படி அரிசி பொங்கி 20 பிண்டம் (எள் சேர்த்து) பிடிக்க வேண்டும். 10 பிண்டம் பெரிதாகவும் 10 சிறிதாகவும் இருக்க வேண்டும்.
வாழைப்பொத்தி வடிவில் எள் சேர்த்து ஒரு பெரிய பிண்டம். (பிரபூத பலி)
இந்தச் சட்டியும் கரண்டியும் சபீண்டீகரணத்தன்று (12ம் நாள்) நிமித்தருக்குக் கொடுக்க வேண்டும்.

2. தனி அரிசிமாவைக் குழைத்து அடுப்பின் தணலில் ரொட்டியை வேகவைத்து எடுக்க வேண்டும். ரொட்டி - 3

3. பாஷாணஸ்தாபனத்திற்காக ஒரு அடி ஆழமுடைய வ்ருத்த குண்டம் ஒன்று தோண்டவேண்டும்.

4. ஒரு மண்சட்டிக்கு அடியில் மூன்று பெரிய துவாரம் இடவேண்டும்.


5. ஒரு பாத்திரத்தில் ஜலம்.

6. வாசோதகம் தினமும் மூன்று செய்யவேண்டும். (மொத்தம் 30) திலோதகம் முதலாவது நாளில் 3. இரண்டாவது நாளில் 4. இவ்விதம் தினமும் ஒவ்வொன்று கூட்டிச் செய்யவேண்டும். (மொத்தம் 75)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாந்தி ஹோமம், ஆனந்த ஹோமம்

பாஷாணத்தைப் புண்ணிய தீர்த்தத்தில் சேர்த்துவிட்டு சவரம் செய்து ஸ்நானம் செய்யவேண்டும. வீட்டு முற்றத்தில் சாந்தி ஹோமம், ஆனந்த ஹோமம் செய்யவேண்டும்.




1. ஓமத்தட்டு
2. குத்துவிளக்கு
3. கர்த்தா
4. வாத்தியார்

| | | | |
|---|---|---|---|
| நாம்பன் கன்று | 01 | கற்பூரம் | 02பைக்கற் |
| மாவிலங்கம் இலை | 10 | பத்தி | 01பைக்கற் |
| நெல் | சிறிதளவு | சந்தனம் | |
| உமி | | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| நெய் | ¼போத்தல் | செம்பு | 01 |
| சமித்துக்கட்டு | 03 | வட்டகை | 08 |
| (அல்லது மாஞ்சமித்து) | | சில்லறைக்காசு | |
| ஓமத்தட்டு | | பச்சரிசி | சிறிதளவு |
| துளசிக்கன்று | 01 | சொரிபூ | |
| பாசி | சிறிதளவு | குத்துவிளக்கு | |
| தர்ப்பை (நுனியுள்ளது) | | தேங்காயெண்ணெய் | |
| பழம் | 10 | தட்டம் | 02 |
| பாக்கு | 10 | அக்ஷதை | |
| வெற்றிலை | 10 | | |

ஆனந்த ஹோமாக்னியை எடுத்து அடுப்பு மூட்டவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11ஆம் நாள்


1. நவசிராத்தம்
2. விருஷோத்ஸர்ஜனம்
3. ஏகோதிஷ்டம் ([illegible])
4. ஆவிருத்தாத்ய மாசிகம் ([illegible])
5. பஞ்சதச மாசிகம் ([illegible])

## 1. நவசிராத்தம்

நவச்ராத்தம் 5 அல்லது 6 என்பது சூத்திரத்திற்குத் தகுந்தபடி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆபஸ்தம்பிகளுக்கு ஒற்றைப்படை நாளில் செய்யவேண்டியது. நின்றுபோனால் 11ம் நாளில் சேர்த்துச் செய்யவேண்டும்.

| | |
|---|---|
| சந்தனம் | வேட்டி |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | அரிசி, காய்கறி |
| சில்லறைக்காசு | தக்ஷிணை |
| அக்ஷதை | வெற்றிலை - பாக்கு |
| தர்ப்பை - நுனியுள்ளது | சொரிபூ |

## 2. விருஷோத்ஸர்ஜனம்




1. புண்யாகம்
2. ஓமத்தட்டு
3. கும்பம்
4. குத்துவிளக்கு
5. கர்த்தா
6. வாத்தியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சந்தனம் | 25கிராம் | பச்சரிசி | 01கிலோ |
| ஊதுபத்தி | 01பைக்கற் | நூல்சுற்றிய குடம் | 01 |
| பழம் | 10 | * சரு | |
| பாக்கு | 15 | அறுகு | |
| வெற்றிலை | 15 | மாவிலை | |
| மஞ்சள்மா | 25கிராம் | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| கற்பூரம் | 2பைக்கற் | வட்டகை | 8 |
| பசுநெய் | ¼போத்தல் | பலாசமிலை | 06 |
| சால்வைத்துண்டு | 01 | தேங்காய் | 02 |
| நாம்பன் கன்று | 01 | தர்ப்பை-நுனியுள்ளது | 54 |
| சில்லறைக்காசு | | தட்டம் | 02 |
| அக்ஷதை | | செம்பு | 01 |
| சமித்து 3கட்டு அல்லது மாஞ்சமித்து | | குத்துவிளக்கு | |
| உமி | | கற்பூரத்தட்டு | |
| சொரிபூ | | ஓமத்தட்டு | |

இடபதானம்: வேட்டி, அரிசி, காய்கறி, தீபம், ஜலபாத்திரம், எள்ளு, தக்ஷிணை


*சரு: சிறிதளவு அரிசி மாவில் சிறிது சர்க்கரை சேர்த்து வேகவைக்க வேண்டும்.

விருஷோத்ஸர்ஜனம் வீட்டு வாசலுக்குமுன் செய்ய வேண்டும். விருஷோத்ஸர்ஜனத்திற்கு சிவப்பு நிறமுள்ள ஒன்று அல்லது இரண்டு வயதுள்ள விருஷபம் விசேஷம்.
புத்திரன் இல்லாத ஸ்திரீ கணவனுக்கு முன் இறந்தால் விருஷோத்ஸர்ஜனம் செய்யவேண்டியதில்லை. ஒரு பசுவைத் தானம் செய்யவேண்டும்.
கணவன் மனைவிக்கு விருஷோத்ஸர்ஜனம் செய்யவேண்டியதில்லை.
விருஷோத்ஸர்ஜனம் - விருஷபத்தைக் கலைத்துவிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகோதிஷ்டம் (ஞூஉ௯ உஈஷி கூ௨)




1. புண்யாகம்
2. ஓமகுண்டம்
3. குத்துவிளக்கு
4. கர்த்தா
5. வாத்தியார்
6. அடுப்பு (சாதம் வைக்க)

| | | | |
|---|---|---|---|
| அரப்பு | சிறிதளவு | வாழையிலை | 02 |
| நல்லெண்ணெய் | சிறிதளவு | தர்ப்பை நுனியுள்ளது | |
| தேசிக்காய் | 01 | தொன்னை | 04 |
| விளக்கிய எள் - சர்க்கரை | | (அல்லது வட்டகை) | |
| | (சிறிதளவு) | துளசி | |
| பசுநெய் | ¼போத்தல் | அத்தி இலை | 05 |
| தேன் | 2அவு | உமி | |
| கறுப்பு எள் | | சமித்துக்கட்டு | 03 |
| வெற்றிலை | 10 | (அல்லது மாஞ்சமித்து) | |
| பழம் | 05 | விறகு | |
| பாக்கு | 10 | குத்துவிளக்கு | |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | | செம்பு | 01 |
| சந்தனம் | | தட்டம் | 02 |
| சில்லறைக்காசு | | கற்பூரம் | 02 பைக்கற் |

* வீட்டுக்குத் தெற்கில் அல்லது வடகிழக்கில் முக்கோண வடிவில் ஒரு முழ ஆழத்தில் குண்டம் ஒன்று அமைக்கவேண்டும். உள் விஸ்தீரணம் 1அடி

¾ படி தீட்டல் பச்சரிசியில் கத்தரிக்காய், வாழைக்காய், காரை, முல்லை, முசுட்டை இவைகளை வெட்டிப்போட்டு வேகவைக்கவேண்டும். இதைக் குண்டத்துக்கு அண்மையில் செய்யவேண்டும்.

குதிரைக் குளம்புப் பிரமாணத்தில் 32 உருண்டைகள்
தேங்காய்ப் பிரமாணம் 01 உருண்டை
சொரி சாதம் கொஞ்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவிருத்தாத்ய மாசிகம் (சூவ ர த்தா ஜ ஹ ஊ வி கூ ஜ)

கர்த்தா ஸ்நானம் செய்து ஆவிருத்தாத்ய மாசிகத்தைச் செய்யவேண்டும்.

| | |
|---|---|
| சந்தனம் | வேட்டி, சால்வை |
| கறுப்பு எள்ளு | அரிசி, காய்கறி |
| துளசி | வெற்றிலை |
| தர்ப்பை - நுனியுள்ளது | பாக்கு |
| சில்லறைக்காசு | தக்ஷிணை |

## பஞ்சதச மாசிகம் (வ ஞ்ஜ ஜ ஶ ஊ வி கூ ஜ)

கர்த்தா ஸ்நானம் செய்து பஞ்சதச மாசிகத்தைச் செய்ய வேண்டும்.
*15 அல்லது 05 அல்லது 03 அல்லது ஒரு பிராமணரையாவது வரிக்கவேண்டும்.*

| | | | |
|---|---|---|---|
| சந்தனம் | 25கிராம் | சில்லறைக்காசு | 50 ரூபா |
| ஊதுபத்தி | 01 பைக்கற | துளசி | |
| பழம் | 10 | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| பாக்கு | 15 | செம்பு | 01 |
| வெற்றிலை | 15 | வட்டகை | 08 |
| பச்சரிசி | 01கிலோ | அத்தி இலை | 06 |
| கற்பூரம் | 02பைக்கற் | மாவிலை | |
| பசுநெய் | ¼ போத்தல் | உமி | |
| தேங்காய் | 01 | ஓமத்தட்டு | |
| கறுப்பு எள்ளு | | தட்டம் | 02 |
| தேன் | 02அவு | குத்துவிளக்கு | |
| தர்ப்பை - நுனியுள்ளது | | கோமயம் சிறிதளவு | |
| சமித்துக்கட்டு | 03 | | |

அல்லது மாஞ்சமித்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லெண்ணெய்
அரப்பு
தேசிக்காய்
சர்க்கரையுடன் கலந்த
விளக்கிய எள்
வேட்டி, சால்வை
யக்ஞோபவீதம்
ஜலபாத்திரம்
விபூதிப்பை
தக்ஷிணை
ஆசனப்பலகை
சாப்பாட்டிற்குப்
பச்சரிசிச் சாதம்
கறிவகைகள், பச்சடி வகைகள்
அரிசிப்பாயசம்
உழுந்துவடை
பலகாரவகைகள்
பழவகைகள்
தலைவாழையிலை
ஒருவருக்கு 2 வீதம்
தொன்னைகள்
பருப்பு, பாயசம், தயிர்
நெய், தேன் போன்றவை
வைப்பதற்கு

இவை அனைத்தும் பிராமணர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அதாவது எத்தனை பிராமணர்களைத் தானத்துக்கு நியமிக்கின்றோமோ அதற்கு ஏற்றவாறு தயார்செய்ய வேண்டும். நல்லெண்ணெய் தொன்னையில் அல்லது சிறிய கிண்ணத்தில் விட்டுவைக்கவேண்டும்.

மண்டலம்: வீட்டு வாயிற்படிக்கு எதிரில் முக்கோண வடிவில் மண்டலம் அமைக்க வேண்டும். உள் விஸ்தீரணம் 1விதஸ்தி (12 அங்குலம்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் அலம்ப வாளியில் தண்ணீரும் செம்பும்.

பிண்டம்: சுவதேயம் வைத்த சாதம் சேர்த்து 15 பிண்டங்கள் பிடிக்கவேண்டும்.

நிமந்தரப் பிராமணர்கள் சாப்பிட்ட இலைகள், எஞ்சிய உணவுப் பதார்த்தங்கள் இவற்றைக் கிடங்கில் புதைக்கவேண்டும்.

சபிண்டீகரணத்திற்கு முன் செய்யும் மாசிகங்களை ஏகோதிஷ்ட விதானமாகச் செய்யவேண்டும்.




1. புண்யாகம்
2. ஓமத்தட்டு
3. குத்துவிளக்கு
4. கர்த்தா
5. வாத்தியார்
6. தானப் பிராமணர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபிண்டீகரணம் (12ம் நாள்)

மூன்று பிராமணர்களை வரிக்க வேண்டும். அவர்களில் ஒருவரை நிமித்தராக நியமிக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| சந்தனம் | 25கிராம் | சில்லறைக்காசு | 75 ரூபா |
| ஊதுபத்தி | 01 பைக்கற் | மாவிலை | |
| கற்பூரம் | 01 பைக்கற் | பலாசமிலை | 06 |
| நெய் | ¼ போத்தல் | அத்தியிலை | 06 |
| பழம் | 15 | அறுகு | |
| பாக்கு | 15 | கோமயம் | சிறிதளவு |
| வெற்றிலை | 15 | சொரிதுளசி | |
| பச்சரிசி | 01கிலோ | சொரிபூ | |
| தேங்காய் | 01 | அக்ஷதை | |
| கறுப்பு எள்ளு | 150 கிராம் | பஞ்சபாத்திரம், | உத்தரணி |
| தேன் | 02 அவு | வட்டகை | 08 |
| சமித்துக்கட்டு அல்லது மாஞ்சமித்து | 04 | செம்பு | 01 |
| | | தட்டம் | 03 |
| தர்ப்பை நுனியுள்ளது | 108 | குத்துவிளக்கு | |
| | | உமி | |
| நெல்லு | சிறிதளவு | ஓமத்தட்டு | |

பிண்டகண்டத்திற்கு பொன் அல்லது வெள்ளிக் கம்பி

நிமித்தருக்கு: தீபம், குடை, பாதரட்சை, பாய், தலையணை விசிறி, பொன் மேலும் விரும்பிய உபசாரப் பொருட்கள், வேஷ்டி, சால்வை, பெண்ணின் சபிண்டீகரணமாயின் சேலை, சட்டைத்துணி போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லெண்ணெய்
அரப்பு
தேசிக்காய்
சர்க்கரையுடன் கலந்த
விளக்கிய எள்
வேட்டி, சால்வை
யக்ஞோபவீதம்
ஜலபாத்திரம்
விபூதிப்பை
தக்ஷிணை
ஆசனப்பலகை

இவை அனைத்தும் மூன்று பிராமணர்களுக்கு ஏற்றவாறு மும்மூன்று பொருட்கள் தயார் செய்யவேண்டும். நல்லெண்ணெய் 3 தொன்னையில் அல்லது 3 கிண்ணங்களில் விடவேண்டும்.

சாப்பாட்டிற்குப்
பச்சரிசிச் சாதம்
கறிவகைகள், பச்சடி வகைகள்
அரிசிப்பாயசம்
உழுந்துவடை
பலகாரவகைகள்
பழவகைகள்
தலைவாழையிலை 07
தொன்னைகள்
பருப்பு, பாயசம், தயிர், நெய், தேன் போன்றவை வைப்பதற்கு

இவை அனைத்தும் நிமித்தருக்குத் தனியாகவும் மற்ற இருவருக்குத் தனியாகவும் பாகம் செய்யவேண்டும்.

பாஷாணத்தாபனத்தன்று பிண்டத்திற்கு அரிசி பொங்கிய அதே சட்டியில் நிமித்தரின் சாப்பாட்டிற்குரிய சாதம் வைக்கவேண்டும். இந்தச் சட்டியைக் கடைசியில் நிமித்தருக்குக் கொடுக்கவேண்டும்.

பிண்டம்: பிதிரருக்கும் விஸ்வே தேவருக்கும் வைத்த சாதத்தில் ஆறு பிண்டமும் வாயச பிண்டம் ஒன்றும் எள், துளசி, சுதேயம் வைத்த சாதம் என்பனவும் சேர்க்கவேண்டும்.

நிமித்தருக்கு வைத்த சாதத்தில் வாழைப்பூ வடிவில் ஒரு பிண்டமும் பிடிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதரணீ கோதானம்: கன்றுடன் கூடிய பசு தக்ஷிணை

பாதேய சிராத்தம்: வேட்டி, அரிசி, காய்கறி, ஒரு கிண்ணத்தில் தயிர், தீபம், தக்ஷிணை.

விருத்த பிரபிதாமகனுக்குச் செய்யும் பாதேய சிராத்தமானது ஆமத்தினாலேயே செய்யவேண்டும். அவருக்கு வேறு சிராத்தமே கிடையாது.

ஸபிண்டீகரணம்: பிண்டங்களை ஒன்றுசேர்ப்பது





1. புண்யாகம்
2. ஓமத்தட்டு
3. குத்துவிளக்கு
4. கர்த்தா
5. வாத்தியார்
6. விஸ்வே தேவர்
7. பிதிர்
8. நிமித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலம்: வீட்டு வாயிற்படிக்கு எதிரில் கால் அலம்ப மண்டலம் அமைக்கவேண்டும்.




1. வடக்கில் சதுரம். விஸ்வேதேவர்

2. நடுவில் முக்கோணம். நிமித்தர்

3. தெற்கில் வட்டம். பிதிர்கள்

4. மண்டலங்களின் உள் விஸ்தீரணம் 1 விதஸ்தி (12 அங்குலம்)


5. ஒவ்வொரு மண்டலங்களுக்கும் இடைவெளி ½ விதஸ்தி (6 அங்குலம்)

ஒரு வாளியில் தண்ணீரும் செம்பும் ஒரு தட்டத்தில் சிறிதளவு சந்தனம், நெய், கோமயம், துளசி, எள், அக்ஷதை, கட்டைத்தர்ப்பை 10 என்பன வைக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருகயக்ஞம் (13ம் நாள்)




1. புண்யாகம்
2. நவக்கிரக பதம்
3. கும்பம்
4. ஓமத்தட்டு
5. கர்த்தா
6. வாத்தியார்

தானியம்: கோதுமை, பச்சரிசி துவரை, பயறு, கடலை மொச்சை, உழுந்து எள்ளு, கொள்ளு.

சமித்து: எருக்கலை, பலாசு, நாயுருவி, கருங்காலி, அரசு, அத்தி, அறுகு, வன்னி, தர்ப்பை, சீந்தில்


| | |
|---|---|
| குங்குமம் | |
| சந்தனம் | |
| மஞ்சள்மா | |
| ஊதுபத்தி | |
| கற்பூரம் | 05பைக்கற் |
| பசுநெய் | 01போத்தல் |
| தேங்காய் | 03 |
| பச்சரிசி | 03கிலோ |
| சால்வைத்துண்டு | 01 |
| பழம் | 20 |
| பாக்கு | 20 |
| வெற்றிலை | 25 |
| தீர்ப்பை நுனியுள்ளது | 108 |
| சில்லறைக்காசு | |
| கண்ணாடி (சிறிது) | 01 |
| சர்க்கரைச்சாதம் | ½படி |
| பால் | |
| அறுகு | |

| | |
|---|---|
| மாவிலை | |
| பலாசமிலை | 06 |
| மாஞ்சமித்து | |
| உமி | |
| ஓமத்தட்டு (பெரியது) | |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| செம்பு | 01 |
| நூல் சுற்றிய குடம் | 01 |
| வட்டகை | 08 |
| தட்டம் | 02 |
| குத்துவிளக்கு | |
| அக்ஷதை | |
| வெள்ளை, சிவப்பு, மஞ்சள், நீலப் பூக்கள், துளசி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேஷ்டி




பந்தல் ஒன்பது பாகம் நீள அகலம்.
பஞ்சகவ்ய மேடை ஒரு பாகம்.
சிவகும்பம், வர்த்தனி கும்பம் இரண்டும் இருக்குமிடங்கள் தனித்தனியே ஒவ்வொருபாகச் சதுர மேடைகள்.
சிதாஸ்தானம் 4X2 பாகம்.
திக்தேவதா ஸ்தானங்களில் தசாயுத கும்பங்கள்.

பதம் 5X5=25

ம - மஞ்சள் மா
சி - செங்கல் மா
க - கரி மா
வெ - அரிசி மா
ப - பச்சிலை மா

| | | | | |
|---|---|---|---|---|
| க | க | சி | ப | ப |
| க | க | ம | ப | ப |
| வெ | ம | ம | ம | ம |
| வெ | வெ | ம | சி | சி |
| வெ | வெ | க | சி | சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நெல்லு | 07படி |
| பச்சரிசி | 02படி |
| பயறு | 01படி |
| உழுந்து | 01படி |
| எள்ளு | 01படி |
| நவதானியம் | 100கிராம் |
| நெற்பொரி | 100கி |
| பஞ்ச சூர்ணம்: | |
| மஞ்சள் மா | |
| அரிசி மா | |
| செங்கல் மா | |
| கரி மா | |
| பச்சிலை மா | |
| (புல்லாந்தி மா) | |
| பஞ்சவர்ண நூல் | 1கழி |
| நூற்பந்து | 05 |
| பூமாலை | 02 |
| சரப்பந்து | 04 |
| சொரி பூ | |
| பத்திரம் | |
| குத்துவிளக்கு | |
| பஞ்சபாத்திரம்— உத்தரணி | |
| தட்டம் | 01 |
| மணி | |

| | |
|---|---|
| கற்பூரத்தட்டு | |
| தீபக்கால் | |
| தூபக்கால் | |
| ஊதுபத்தி | |
| கற்பூரம் | |
| கும்பம் | 12 |
| பால் | ¼ போத்தல் |
| தயிர் | சிறிதளவு |
| நெய் | ½ போத்தல் |
| கோஜலம் | |
| கோமயம் | |
| கத்தரிக்கோல் | |
| சமித்து | 2கட்டு |
| வாழையிலை | 20 |
| மாவிலை | 100 |
| தர்ப்பை - நுனியுடன் | 100 |
| தேங்காய் | 13 |
| பழம் | 25 |
| பாக்கு | 25 |
| வெற்றிலை | 25 |
| சந்தனம் | 25கிராம் |
| சில்லறைக்காசு | |
| நெய்ச்சட்டி | |
| அக்ஷதை | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

திரு. ஆனந்தராஜா குமாரசுவாமியின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தவர்கள், தொலைபேசி, தந்தி, கடிதம், மலர் வளையம் மூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதலளித்தவர்கள், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த உறவினர்கள், நண்பர்கள். அயலவர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 3, C புளொக்
பம்பலப்பிட்டி தொடர்மாடி,
கொழும்பு 4.

பிள்ளைகள்
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்

# ACKNOWLEDGEMENT

*The family members of the late*
*Mr. Anandarajah Coomarasamy*
*express their sincere gratitude and thanks to relatives,*
*friends and all who attended the funeral,*
*called over at their residence, sent messages of condolence,*
*floral tributes and all those who helped in numerous ways*
*during our recent bereavement.*

**No. 3 , Block C,**
**Bambalapitiya Flats,**
**Colombo 4.**

**Children**
**Son in law, daughter in low,**
**Grand Children**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

மயில்வாகனம்பிள்ளை
+
செல்வநாயகம்

**ஜெயவேணி**

ஸ்ரீகருணை
+
தியாகராஜா

தவலிங்கம்
+
எலிசபெத்

தவசோதி
+
கோணேஸ்வரி

தனலக்
+
தர்மலிங்

சுவேந்திரி
+
இன்பபாலன்

பரதன்
துஷ்யந்தன்
லாவண்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவழி

முதலியார் குமாரசுவாமி
+
கனகசௌந்தரம்

லக்ஸ்மி + லிங்கம் | பரமேஸ்வரி + செல்லகாந்தன் | நடராஜா + உமாராணி | மகேஸ்வரி + நடராஜா | **ஆனந்தராஜா**

சுரேஷ்
+
பிருந்தா

அபயங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது
வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by : Anush Printers, Colombo-11. Tel : 0777-244893